# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**<u>முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்</u>**

**<u>மேல் முறையீட்டு மனு எண் 40 / 2016</u>**

திருமதி. மீனாம்பிகை,
தண்டபாணி கோவில்,
சொக்க நாதபுரம்,
அச்சம்பத்து, மதுரை – 625 019.

..... மேல் முறையீட்டாளர்
(திருமதி. மீனாம்பிகை)

எதிர்

1. தலைவர்
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர், மதுரை – 625 007.

2. செயற்பொறியாளர்,
உசிலம்பட்டி,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
உசிலம்பட்டி – 625 532.

3. உதவி பொறியாளர்,
ஆழ்வார் நகர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மதுரை– 625 019.

...... எதிர் மனுதாரர்கள்
(திரு. தங்க முத்து, உதவிபொறியாளர்/ஆழ்வார்நகர்)

**<u>கேட்புரை நாள் – 26 .7. 2016</u>**

**<u>ஆணை நாள் – 18.8. 2016</u>**

திருமதி. மீனாம்பிகை, சொக்கநாதபுரம், அச்சம்பத்து அவர்களின் 26.4.2016 நாளிட்ட மேல்முறையீட்டு மனு எண். 40/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 26.7.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மேல்முறையீட்டாளரின் நியமான கோரிக்கையை சட்டத்திற்கு புறம்பான வழியில் நிராகரித்ததை இரத்து செய்து திரு. தவமணி மற்றும் அவரது மகன் முத்துராமன் ஆகிய இருவருக்கும் வழங்கிய மின்இணைப்பை துண்டிக்க ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 திருமதி. மீனாம்பிகை அவர்கள் மதுரை மாவட்டம், மதுரை மேற்கு தாலுகாவிற்குட்பட்ட ஏற்குடி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீபால தண்டாயுதபாணி கோவிலின் தர்மகர்த்தா ஆவார்.

2.2 கோவிலின் மேற்குபுரம் காலியாக உள்ள புல எண்.80/1 மற்றும் 80/2 பழைய புல எண்.20/1A 20/1B ஆகிய இடத்தில் திரு. M.தவமணி மற்றும் முத்துராமன் ஆகியோர் கட்டியுள்ள கட்டிடத்திற்கு மின்இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட இடத்திற்கு மின்இணைப்பு கொடுக்க கூடாது என்று ஆட்சேபனை செய்தும் மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மின்இணைப்பை துண்டிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

2.3 திருமங்கலம் முன்சீப் கோர்ட்டில் நிலஉரிமை குறித்த வழக்கு O.S.No.332/2014 நிலுவையில் உள்ளது.

2.4 மதுரை மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 9.2.2016ல் திரு. தவமணிக்கு கொடுக்கப்பட்ட மின்இணைப்பை துண்டிக்க வேண்டும் என்று முறையீடு செய்துள்ளார்.

2.5 மன்றம், மனுவை தள்ளுபடி செய்து தீர்வு வழங்கியுள்ளது. மேற்கண்ட தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>**

மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 13.4.2016 நாளிட்ட ஆணையில் வழங்கியுள்ளது. அந்த ஆணையின் சம்பந்தபட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"<u>மன்றத்தின் தீர்வு:</u>*

*முறையீட்டாளரின் கோரிக்கை மற்றும் எதிர்மனுதாரர்கள் சார்பில் மன்றத்தில் தெரிவித்த பதிலுரைகளின் அடிப்படையிலும் திருமங்கலம் முன்சீப் கோர்ட்டில் முறையீட்டாளரால் தொடரப்பட்டு நிலுவையிலுள்ள (O.S.No.332/2014) வழக்கில் திரு. தவமணி அவர்களுக்கு சொந்தமான கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்குவது சம்பந்தமாக நீதிமன்ற தடை ஆணை (Interim injunction) தெரிவிக்கப்படவில்லை என்பதனாலும், திரு. தவமணி அவர்களால் புதிய தாழ்வழுத்த மின்இணைப்பு வேண்டிய விண்ணபத்துடன் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்களின் அடிப்படையிலும், திரு. தவமணி அவர்களின் பெயரில் மேற்கண்ட கட்டிடத்ததிற்கு தாழ்வழுத்த மின்இணைப்பு வழங்கலாம் என திருமங்கலம் சார்பு நீதிமன்ற அரசு வழக்கறிஞர் அவர்களால் 2.6.2015 அன்று வழங்கப்பட்ட சட்ட கருத்துருவின் அடிப்படையிலும் திரு. தவமணி என்பார்க்கு வழங்கப்பட்ட மின்இணைப்பானது உரிய வாரிய விதிமுறைகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனை மின்துண்டிப்பு செய்யக் கோரிய முறையீட்டாளரின் கோரிக்கையினை ஏற்க இயலாது எனவும் திருவிழா நடைபெறுவதற்கு இடையூறாக உள்ள வேறு நபருக்கு புதிதாக வழங்கப்பட்ட மும்முனை மின்இணைப்பிற்கான சர்வீஸ் வயரினை வேறு மின்கம்பத்திற்கு மாற்றி இணைப்பு செய்திடுவதற்கு இதுவரை முறையீட்டாளர் விண்ணப்பம் ஏதும் அளிக்கவில்லை என்பதனால் அந்த சர்வீஸ் வயரினை மாற்றியமைக்கவில்லை எனவும், விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் வாரிய விதிமுறைகளின் படி, உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் எதிர்மனுதாரர்கள் தெரிவித்ததனை இம்மன்றம் ஏற்று முறையீட்டாளரின் ஆட்சேபனை மனுவினை நிராகரித்து எதிர்மனுதாரர்களால் திரு. தவமணி என்பார்க்கு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற முறையீட்டாளரின் கோரிக்கையினை நிராகரிக்கிறது."*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

4.1 திருமங்கலம் முன்சீப் கோர்ட்டில் நிலுவையில் உள்ள வழக்கில் மின்இணைப்பு வழங்க தடையாணை பெறப்படவில்லை என்று காரணம் கூறப்பட்டுள்ளது. ஒரு சொத்தின் நில உரிமை குறித்து சிவில் நீதிமன்றததில் வழக்கு நிலுவையில் இருந்தால் (Matter sub judice) வழக்கின் முடிவு தெரியும்வரை எந்த முடிவும் எடுக்கக் கூடாது என்பது அரசின் கொள்கை. இந்த நேர்வில் அரசின் கொள்கை மீறப்பட்டுள்ளது.

4.2 திரு. தவமணி அவர்களுக்கு ஆதரவாக வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான வாதம். வழக்கு நிலுவையில் இருப்பதால் சம்பந்தப்பட்ட புலங்களுக்கு திரு. தவமணி பெயரில் பட்டா மாறுதல் செய்வதை மதுரை மேற்கு வட்டாட்சியர் நிறுத்தி வைத்துள்ளார். இதுகுறித்து சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருக்கு தாக்கீதும் அனுப்பியுள்ளார். உண்மை நிலை இவ்வாறிருக்க திரு. தவமணி எவ்வாறு அவருக்கு ஆதரவாக வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்திருக்க முடியும்? எனவே, இது தவறான முடிவு.

4.3 இந்நேர்வில் திருமங்கலம் சார்பு நீதிமன்ற அரசு வழக்குரைஞரின் சட்ட கருத்துருவின் அடிப்படையில் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சார்பு நீதிமன்ற அரசு வழக்குரைஞரின் சட்டக் கருத்துரையை கேட்க உதவி மின் பொறியாளருக்கு அதிகாரம் யார் வழங்கியது என்பது துலக்கப்படவில்லை. ஆட்சேபணையுள்ள நேர்வுகளில் அரசு வழக்குரைஞரின் சட்டக் கருத்துரையை கேட்கலாம் என மின்சார சட்ட விதிகளில் கூறப்படவில்லை. மேலும், சார்பு நீதிமன்ற அரசு வழக்குரைஞர் வழங்கிய சட்டக் கருத்துரை ஒருதலைபட்சமானது. இறுதியானதுமல்ல. சட்டப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்நேர்வில் ஆழ்வார் நகர் உதவி மின்பொறியாளர் மேலதிகாரிகளின் அறிவுரையை பெறாமல் தன்னிச்சையாக ஆக்கிரமிப்பாளர் திரு. தவமணிக்கு ஆதரவாகச் செயல்பட்டுள்ளார்.

4.4 திரு. தவமணி மற்றும் முத்துராமனுக்கு வழங்கப்பட்ட மின்இணைப்பு மின்வாரிய விதிமுறைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக பொதுவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்தவிதிமுறைப்படி அவரது ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது என்பதற்கு தெளிவான விளக்கம் இல்லை. திரு. தவமணி நீதிமன்றத்தில் ஆணை பெற்றுவருமாறு தெரிவிக்காமல் அரசு வழக்குரைஞரின் கருத்துரையை மட்டும் பெற்று மின்இணைப்பு வழங்கியிருப்பதன் மூலம் ஆக்கிரமிப்பாளருக்கு மின்வாரிய அதிகாரிகள் ஆதரவாக செயல்பட்டுள்ளனர் என்பது உறுதியாகிறது.

4.5 திருவிழா நடைபெறும் இடத்திற்கு இடையூறாக வேறு நபருக்கு வழங்கப்பட்டுள்ள மும்முனை சர்வீஸ் வயரை வேறு மின்கம்பத்திற்கு மாற்றி இணைப்பு வழங்க அவர் விண்ணபம் வழங்கவில்லை என்று கூறியிருப்பது உண்மையை மூடி மறைக்கும் செயல். இதுகுறித்து அழ்வார் நகர் உதவி மின்பொறியாளருக்கு சமர்ப்பித்த ஆட்சேபணை மனுவில் திரு. தவமணி என்பவருக்கு சொந்தமான இடம் என்று குறிப்பிட்டது தவறு என்று கூறியுள்ளார்கள். சம்பந்தப்பட்ட இடம் திரு.தவமணியின்மகன் முத்துராமன் பெயரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. முத்துராமன் வெளிநாட்டில் வசிக்கிறார். முத்துராமனின் அதிகாரம் பெற்ற ஏஜெண்ட்டாக திரு. தவமணி செயல்படுகிறார் என்பது மட்டுமல்லாது திரு. தவமணிதான் பூமியில் உண்மையான ஆக்கிரமிப்பாளர். எனவே, இது உண்மையை மறைக்கும் முயற்சியாக கருதுகிறார். மேலும், ஆணையில் குறிப்பிட்டதுபோல் ஆழ்வார் நகர் உதவி மின்பொறியாளரிடம் புதிய விண்ணப்பம் உடனடியாக வழங்கியும் இன்றுவரை மின்பாதையை மாற்றி அமைக்கவில்லை. இதனால் திருவிழா நடைபெறுவது தடைபடுகிறது. அவருடைய ஆட்சேபணையை நிராகரித்து திரு. தவமணி மற்றும் அவரது மகன் திரு. முத்துராமன் கட்டிடங்களுக்கு மின் இணைப்பு வழங்கியதன் மூலம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக ஆழ்வார் நகர் மின் உதவி பொறியாளர் செயல்பட்டுள்ளார். அரசின் கொள்கை முடிவு மீறப்பட்டுள்ளது.

4.6 எனவே, அவருடைய நியாயமான கோரிக்கையை சட்டத்திற்கு புறம்பான வழியில் நிராகரித்ததை இரத்து செய்து திரு. தவமணி மற்றும் அவரது மகன் முத்துராமன் ஆகிய இருவருக்கும் வழங்கிய

மின்இணைப்பை துண்டிக்க ஆணையிடுமாறு பணிவுடன் வேண்டுகிறார். இத்துடன் அவரது கோரிக்கைக்கு ஆதரவான கீழ்கண்ட ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார்.

(i) ஆட்சேபணை மனு நகல்
(ii) சிவில் வழக்கின் பிராது நகல்
(iii) மதுரை மேற்கு வட்டாட்சியர் கடித நகல்
(iv) உயில் சாசன நகல்
(v) பட்டா நகல்
(vi) ஆணை (அசலாக)
(vii) 1932ம் ஆண்டு நன்கொடை சாசன நகல்

**5.0 <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>**

5.1 திரு. தவமணி த/பெ முத்துப்பிள்ளை சொக்கநாதபுரம் அச்சம்பத்து அவர்கள் வீட்டிற்கு புதிய மின்இணைப்பு வேண்டி 23.5.15 தேதியில் விண்ணப்பம் அளித்திருந்தார். விண்ணப்பத்துடன் ஆவணங்களாக அச்சம்பத்து ஊராட்சி தலைவரால் வழங்கப்பட்ட வீட்டுவரி இரசீது (92561) திரு. தவமணி பெயரில் உள்ள கிரைய ஆவணம் எண்.1227 மற்றும் ஊராட்சி தலைவரால் அனுமதி வழங்கப்பட்டுள்ள கட்டிட வரைபடம் அளித்திருந்தார்.

5.2 திருமதி. மீனாம்பிகை, சொக்கநாதபுரம் அச்சம்பத்து அவர்களிடமிருந்து 12.12.14 தேதியில் திரு. எம். தவமணி அவர்கள் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளார் என இவ்வலுவலகத்தில் புகார் மனு பெறப்பட்டது மேலும், புகார் மனுவுடன் திருமங்கலம் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் நடைபெறும் வழக்கு எண்.O.S.No.332/2014க்குரிய ஆவணங்கள் வழங்கப்பட்டிருந்தது.

5.3 தற்சமயம் வழக்கு நிலுவையில் உள்ளதாலும் மேலும் திருமதி. மீனாம்பிகை அவர்கள் மின்இணைப்பு சம்மந்தமாக வழக்கில் எந்த இடத்தில் குறிப்பிடாததாலும் மேலும் மின் வாரியத்திற்கு எதிரான வழக்காக இல்லாத நிலையில் திரு. தவமணி TNERC Distribution Code 27(2)ன் படி lawful occupationக்கான அனைத்து ஆவணங்களும் அளித்திருந்த சூழ்நிலையில் திரு. எம். தவமணி அவர்களால் வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் திருமதி. வி. மீனாம்பிகை அவர்களால் வழங்கப்பட்ட ஆவணங்கள் கொண்டும் வழக்கின் தன்மையை கொண்டும் திரு.எம். தவமணி அவர்களால் வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் திருமதி. மீனாம்பிகை அவர்களால் வழங்கப்பட்ட ஆவணங்கள் சம்பந்தமாக திருமங்கலம் சார்பு நீதிமன்ற அரசு வழக்கறிஞரிடம் மின்இணைப்பு வழங்குவது சம்பந்தமாக 27.5.15 தேதியில் சட்ட கருத்துரை கோரப்பட்டது. அதன் விவரம் 02.6.2015 தேதியில் இது சம்பந்தமாக திருமதி. மீனாம்பிகை என்பார்க்கு பதில் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

5.4 2.6.15 தேதியிட்டு அரசு வழக்கறிஞர் திருமங்கலம் நீதிமன்றம் அவர்களால் வழங்கப்பட்ட சட்ட கருத்துரையில் திருமதி. மீனாம்பிகை என்பார் தடை உத்தரவு அல்லது பரிகாரமோ கேட்கப்படாத சூழ்நிலையில் மேற்படி கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்கலாம் என சட்டக்கருத்துரை வழங்கியுள்ளார்.

5.5 அரசு வழக்கறிஞர் திருமங்கலம் நீதிமன்றம் அவர்களால் வழங்கிய சட்ட கருத்துரையின்படி 15.7.15 தேதியில் மின்இணைப்பு திரு. எம். தவமணி அவர்களுக்கு SC No.175–004–1622 வழங்கப்பட்டது.

5.6 மேலும், திருமதி. மீனாம்பிகை அவர்களால் 10.2.16 அன்று மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் மனு ஒன்று அளிக்கப்பட்டது மனுவில் திருவிழா நடைபெறும் பாதைக்கு குறுக்காக மின்வயர் அமைத்து மின்இணைப்பு கொடுத்துள்ளதாகவும் தவமணி என்பாருக்கு கொடுத்த மின்இணைப்பு துண்டிப்பு செய்யவும் கோரியிருந்தார்.

5.7 அதற்கான கேட்புரை 4.3.2016 அன்று மதுரை நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் நடைபெற்றது. மேலும், அதற்கான தீர்ப்புரையில் திரு. தவமணி என்பாருக்கு வழங்கப்பட்ட மின்இணைப்பானது உரிய வாரிய விதிமுறைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனை மின்துண்டிப்பு செய்யக்கோரிய முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்க இயலாது எனவும் மேலும், திருவிழா நடைபெறுவதற்கு இடையூறாக உள்ள வேறு நபருக்கு புதிதாக வழங்கப்பட்ட மும்முனை மின் இணைப்பிற்கான சர்வீஸ் வயரினை மாற்றி அமைப்பதற்கு விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் வாரிய விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கை எடுக்க எதிர் மனுதாரர்கள் தெரிவித்தனை முறையீட்டாளர் ஏற்றுக் கொண்டதாக தெரிவித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

5.8 திருமதி. மீனாம்பிகை அவர்கள் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க வேண்டிய விண்ணபத்தினை உதவி மின்பொறியாளர், ஆழ்வார்நகர் பிரிவு அலுவலகத்தில் 4.5.16 அன்று அளித்திருந்தார். அதன் அடிப்படையில் கள ஆய்வு செய்யப்பட்டு 6.5.16 அன்று அவரிடம் சர்வீஸ் வயர் மாற்றுவதற்குரிய கட்டணம் வசூல் செய்யப்பட்டு அன்றைய தினமே சர்வீஸ் வயர் மாற்றி அமைக்கப்பட்டது. அதற்குண்டான தகவல் அவருக்கு 10.5.16 அன்று கடிதம் மூலம் அளிக்கப்பட்டு அதற்கான ஒப்புதலும் அன்றைய தினமே அவரிடம் இருந்து பெறப்பட்டது.

## 6.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 26.7.2016 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளரின் சார்பாக திருமதி. மீனாம்பிகை அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர்–3. திரு. தங்கமுத்து, உதவி பொறியாளர்/ஆழ்வார்நகர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

## 7.0 <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

7.1 மேல்முறையீட்டாளர் திருமதி. மீனாம்பிகை அவர்கள் தன்னுடைய மேல்முறையீட்டிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் அவர்கள் மேற்கண்ட மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள நிலம் 1932ம் வருடம் கோவிலுக்கு செட்டில்மெண்ட் பண்ணப்பட்ட நிலமாகும். நிலத்தில் திரு. தவமணி அவர்கள் கட்டிடம் கட்டியுள்ளார். அந்த இடத்தின் உரிமை மீது கோவில் நிர்வாகத்திற்கும் திரு. தவமணி மற்றும் முத்துராமன் உட்பட 7 பேருக்கும் வழக்கு எண். O.S.No.332/2014ல் திருமங்கலம் முன்சீப் கோர்ட்டில் வழக்கு நடந்து கொண்டிருப்பதால் மின் இணைப்பு தரவேண்டாம் என்று ஆட்சேபனை கடிதம் 18.12.2014 அன்று கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

7.3 மேலும், ஆட்சேபனை உள்ளபொழுது உரிமையியல் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள பொழுது மின்இணைப்பு கொடுத்தது சட்டப்படி தவறு என்றும் வாதிட்டார்.

7.4 மேலும், சட்டக்கருத்தும் மின் வாரியத்தின் வழக்கறிஞரிடம் பெறாமல் அரசு வழக்கறிஞரிடம் பெறப்பட்டுள்ளது இது தவறு என்றும் வாதிட்டார்.

7.5 ஆட்சேபணை செய்த பின்பும் கோவிலுக்கு சொந்தமான நிலத்தில் தனியாருக்கு மின்இணைப்பு வழங்கியுள்ளதால் அந்த மின்இணைப்பை துண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

## 8.0 <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

8.1 திரு. தங்கமுத்து, உதவி பொறியாளர், ஆழ்வார்நகர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியிறுத்தினார்.

8.2 உதவி பொறியாளர், ஆழ்வார்நகர் அவர்கள் மேல்முறையீட்டாளரிடமிருந்து திரு. தவமணி அவர்களுக்கு மின்இணைப்பு கொடுக்க ஆட்சேபணை பெறப்பட்டுள்ளதால் அரசு வழக்கறிஞரின் சட்டக்கருத்துரு பெறப்பட்டது என்றும், சட்ட கருத்துருவில் திருமதி. மீனாம்பிகை அவர்கள் திருமங்கலம் முன்சீப் கோர்ட்டில் நிலுவையிலுள்ள O.S.No.332/2014 என்ற வழக்கில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எதிராக பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. மேலும், மேற்கண்ட வழக்கில் தவமணி அவர்களின் கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்க கூடாது என மீனாம்பிகை என்பவரால் தடையுத்தரவோ அல்லது பரிகாரமோ கேட்கப்படவில்லை என்பதாலும் மின்இணைப்பு சம்பந்தமாக நீதிமன்ற தடை ஆணை எதுவும் பெற்றிருப்பதாக தெரிவிக்கவில்லை என்பதாலும், திரு. M. தவமணி அவர்கள் விண்ணபத்துடன் தாக்கல் செய்துள்ள கிரையப் பத்திர நகல், வீட்டுவரி ரசீது

நில உரிமை பட்டா நகல் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையிலும் தாவா கட்டிடம் திரு. M. தவமணி என்பவரின் முழு உடமையிலும் அனுபவத்திலும் இருப்பதை கவனத்தில் கொண்டு மேற்படி கட்டிடத்திற்கு தவமணி பெயரில் மின்இணைப்பு வழங்கலாம் என்று தெரிவித்துள்ளார் என்றும் வாதிட்டுள்ளார்.

8.3 மேலும், சட்ட பிரச்சனைகள் வரும்பொழுது அரசு வழக்கறிஞரிடம் கருத்துரு கேட்பது வழக்கத்திலுள்ளது என்றும் தெரிவித்தார்.

8.3 மேலும், விண்ணப்பத்துடன் பஞ்சாயத்தில் பெறப்பட்ட வீட்டு வரி ரசீது மற்றும் மேற்கண்ட இடத்தை விலைக்கு வாங்கிய விற்பனை பத்திரத்தின் நகல் பஞ்சாயத்தில் பெறப்பட்ட கட்டிட அனுமதி ஆகியவற்றையும் இணைத்து சமர்ப்பித்திருந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

8.4 மேற்படியாரின் விண்ணப்பம் விதிகளின்படி சரியாக இருந்ததாலும் சட்டக்கருத்துருவின்படியும் மின்இணைப்பு வழங்கலாம் என்று அரசு வழக்கறிஞர் பரிந்துரை செய்திருந்ததாலும் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு தாழ்வழுத்த மின்இணைப்பு வழங்க வேண்டும் என்றால் உரிமைதாரர் பின்பற்ற வேண்டிய விதிகள் என்ன ?

(ii) திரு. M. தவமணி அவர்களின் பெயரில் வழங்கப்பட்ட மின்இணைப்பு எண்.175–044–1622 மேற்கண்ட விதிகளுக்கு இணங்க உள்ளதா? அந்த மின்இணைப்பை துண்டிக்க வேண்டும் என்பது ஏற்புடையதா?

9.2 இந்த மேல்முறையீட்டாளர் திரு. M. தவமணி மற்றும் திரு. முத்துராமன் ஆகியோர் பெயரில் வழங்கப்பட்டுள்ள இரண்டு மின்இணைப்புகளையும் துண்டிக்க வேண்டும் என்று கோரியுள்ளார். ஆனால், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ள மனுவில் திரு. M. தவமணி பெயரிலுள்ள மின்இணைப்பை மட்டும் தான் துண்டிப்பு செய்யவேண்டும் என்று கோரியுள்ளார். மின்குறைதீர்ப்பாளர் ஒரு மேல்முறையீட்டு அலுவலர் என்பதால் மன்றத்தில் ஏற்கெனவே சமர்ப்பித்த கோரிக்கைகளுக்குத்தான் மேல்முறையீடு செய்ய முடியும் எனவே, திரு. M. தவமணி என்ற பெயரில் வழங்கப்பட்ட மின்இணைப்பை

துண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை மட்டும்தான் தீர்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. திரு. முத்துராமனுக்கு வழங்கிய மின்இணைப்பை துண்டிப்பு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்பதால் அந்த கோரிக்கை இந்த மேல்முறையீட்டில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.** <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>

**10.1** ஒரு புதிய தாழ்வழுத்த மின் இணைப்பை பெறுவது சம்பந்தமான விதிகள் பற்றி அறிந்துகொள்ள மின்இணைப்பு வழங்கிய **15.7.2015** அன்று உள்ள பகிர்மான விதித்தொகுப்பின் விதி **27(3)** மற்றும் **27(4)**ஐ ஆராய வேண்டும். அந்த விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"27. Requisitions for Supply of Energy:*
*xxx xxx xx*
*(3) The application for HT service connection shall be in FORM-4. Application for LT service connection (other than Agriculture and Hut), LT Agriculture service connection and LT Hut service connection shall be in FORM - 1,2 and 3 respectively.*

*Note : Requisitions for supply of energy ( Applications) , even if incomplete, and irrespective of whether they are handed over in person or by post, should be acknowledged in writing. If they are in order, they shall be registered immediately and acknowledged. If they are incomplete, the defects should be indicated and returned without registration.*
*(4). An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in Form 5 of Annexure III to this code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce valid proof of his/her being in occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out of effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate."*

**10.2** மேற்கண்ட விதி **27(3)** ன் படி தாழ்வழுத்த மின்சார விவசாயம் தவிர்த்த விண்ணப்பங்கள் படிவம்–**1**ன் படியும் குடிசைக்கான மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் படிவம்–**3**ன் படியும் இருக்க வேண்டும்.

இங்கு வழங்கப்பட்ட மின்இணைப்பு தாழ்வழுத்த மின்இணைப்பு என்பதால் அதற்கான விண்ணப்ப படிவம்–**1** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"FORM-1*
*Application Form for L.T. Service connection (except Agriculture and Hut)*
*FORM OF REQUISITION FOR SUPPLY OF LOW TENSION ENERGY ( SINGLE PHASE / THREE PHASE)*
*[Refer regulation 27(3)]*

*To*

*The Designated Engineer*
*(Address of the Licensee)*

*Sir,*

*1. I hereby request you to supply electrical energy to the premises hereinafter described.*

*(Note : This undertaking does not preclude a separate written contract being entered into, if so desired by the Licensee or the consumer.)*

*2. I agree to pay for said energy, service connection charges, the deposit of such security, meter rent, as may be demanded in accordance with the scale of rates prescribed under Tamil Nadu Electricity Distribution Code, Supply Code, notifications and orders issued in this regard by Tamil Nadu Electricity Regulatory Commission.*

*3. I wish to be charged under Tariff ………… under schedule of the TNERC tariff order dated........... .*

*4. I agree to take supply for …………….. years and utilize the energy in the premises described hereunder or outside the premises for my bonafide use.*

*5. In case I sell or otherwise dispose of the property / vacate the premises while the supply is continued, I agree to give one Calendar month notice in writing and pay all the arrears to the Licensee. Failing such notice, I hold myself responsible for energy consumed in the premises till such notice is given to the Licensee.*

*6. Description of the premises*
*Door No. and / or name of the house or premises*
*Street*
*Town / village and Taluk*
*Owned by (Name in Block letters)*
*Tenanted by (Name in block letters)*
*Applicant's address for correspondence:*
*The following are my requirements*

*7. The following are my requirements*

| *(A) Lighting* | *Number of Points* | *Wattage of points* | *Total wattage* |
|---|---|---|---|
| *(i) Lights* | - | - | - |
| *(ii) Fans* | - | - | - |
| *(iii) Convenient wall plugs* | - | - | - |
| *(B) Domestic electrical apparatus:* | | | |
| *(i) Cookers* | - | - | - |
| *(ii) Water heaters* | - | - | - |
| *(iii) Refrigerator* | - | - | - |
| *(iv) Air Conditioners* | | | |
| *(v) Other purpose* | - | - | - |
| *(vi) Convenient wall plugs* | | | |
| *(C) Power Loads* | | | |
| *(i) Domestic* | | | |
| *(ii) Industrial* | | | |
| *(iii) Welding* | | | |
| *(iv) Other purposes* | | | |
| *(v) Convenient Wall Plugs* | | | |

*Demand applied for in KW*

*The wiring has been completed on :*

*Signature of the Applicant*

*Place :*

*Date :*

*Note : The application shall be accompanied with the following documents:*

*(i) Certified copy of proof of ownership such as sale deed/ partition deed/gift settlement /allotment letter/computer patta / ownership certificate issued by revenue department officials /court judgment or recent property tax receipt.*

*(ii) In the case of joint property, certified copies of proof of ownership such as legal heir certificate along with parent documents specified in note(i) above and consent letters from co-owners. If consent letter is not produced, an indemnity bond with enhanced security deposit.*

*(iii) If the applicant is not the owner, consent letter from owner in FORM NO.5 or valid proof of occupancy, and indemnity bond in FORM NO.6.*

*FOR LICENSEE'S USE ONLY*

*Application registered as No. dated*

*Note.1. In case of transfer of the service, fresh application should be signed by the transferee (or a letter signed by both the transferor and transferee, agreeing to the above conditions for transfer should be obtained).*
*2. Additions or omissions to the connected load to be notified to the Licensee before effecting the electricity connections.*

*PRECAUTION TO BE ADOPTED BY CONSUMERS, OWNERS, ELECTRICAL CONTRACTORS, ELECTRICAL WORKMEN, AND OTHER SUPPLIERS OF ENERGY*

*No electrical installation work, including additions, alterations, repairs and adjustments to existing installations except such replacement of lamps, fans, fuses, switches and other component parts of the installations as in no way alter its capacity or character shall be carried out upon the premises or on behalf of any consumer or owner for the purpose of the supply of energy to such consumer or owner, except by an authorized person specified by the Authority.*

10.3 மேற்கண்ட விண்ணப்பத்தின்படி கீழ்கண்ட ஆவணங்களும் இணைத்து விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(i) உடமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான விற்பனை ஒப்பாவணம்/பாகப்பிரிவினை ஒப்பாவணம்/பரிசு ஒப்பந்தம்/ஒதுக்கீடு கடிதம்/கணினி பட்டா/வருவாய்த்துறை அதிகாரிகளால் வழங்கப்பட்ட உரிமை பத்திரங்கள் /நீதிமன்ற தீர்ப்பு அல்லது சமீபத்தில் செலுத்திய சொத்துவரி ரசீது.

(ii) கூட்டு சொத்து உடமைகளுக்கு உடமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான சட்டபடியான வாரிசு சான்றிதழ், அதனோடு குறிப்பு(i)ல் கூறப்பட்டிருக்கும் மூல பத்திரங்கள் மற்றும் கூட்டு உரிமையாளர்களின்

இசைவு கடிதங்கள். கூட்டுரிமையாளர்களின் இசைவு கடிதங்கள் இல்லையென்றால் ஈட்டுறுதிப் பிணைமுறியோடு மிகுதிப்படுத்தப்பட்ட காப்பீடு தொகை.

(iii) விண்ணப்பதாரர் உடமையாளர் இல்லை எனில் உடமைதாரரின் இசைவு கடிதம் படிவம்–5ல் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது செல்லத்தக்க குடியிருப்பவர் என்ற சான்றும் மற்றும் 6ல் உள்ள ஈட்டுறுதிப்பிணையுறுதியும் சமர்ப்பிக்க வேண்டும்.

10.4 எனவே, புதிய மின்இணைப்பு கோருவோர் ஒழுங்குமுறை ஆணையத்தால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தை அதில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11. <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு</u>:**

11.1 எதிர்மனுதாரர், திரு தவமணி அவர்கள் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள வீட்டிற்கு உரிமை உள்ளவர் என்பதற்கு ஆதாரமாக 2015–2016 ஆம் ஆண்டிற்கான வீட்டு வரி ரசீதின் நகலை அளித்துள்ளார் என்றும், மேலும் அந்த இடத்தினை விலைக்கு வாங்கிய பதிவு செய்யப்பட பத்திரத்தின் நகலையும் அளித்துள்ளார் என்று தெரிவித்து அதன் நகல்களையும் சமர்பித்துள்ளார்.

11.2 அவர் விண்ணபத்தில் 2/100 B தேனி மெயின் ரோடு என்ற வீட்டிற்கு மின் இணைப்பு கோரியுள்ளார். அந்த வீட்டிற்கு வரி ரசீது எண். 92561 நாள் 10.4.15 ல் திரு. M. தவமணி என்ற பெயரில் 2015–2016ற்கான வரியை செலுத்தியுள்ளார் அதன் நகலும் இணைக்கப்பட்டுள்ளது.

11.3 மேலும் ஆவண எண். 1227/2014 542 ½ சதுர அடி நிலத்தை விலைக்கு வாங்கியதற்கான ஆதாரமாக ஆவண எண்.1227/2014ன் நகலையும் அளித்துள்ளார். அதில் திருமதி. S. வசந்தா அவர்களிடமிருந்து திரு. M. தவமணி அவர்கள் நிலத்தை வாங்கியுள்ளார். அதிலுள்ள ஷெட்யூல்(schedule) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“கிரையச் சொத்து விபரம்*
*மதுரை தெற்குபதிவு மாவட்டம், அரசரடி சார்பதிவகம், மதுரை மாவட்டம், மதுரை தெற்கு தாலுகா, ஏற்குடி கிராமம், ரீசர்வே எண்.20/1Aல் செண்டு, 7ம் ரீசர்வே எண்.20/1B செண்டு 14ல் மேல்புறம் செண்டு 7ம் சேர்த்து ஆக மொத்தம் செண்டு 14ல் மேல்புறம் கடைசி செண்டு 3–1/2 ல் கீழ்புறம் பகுதி 542–1/2 சதுரடி மனையிடத்திற்கு நான்குமால் அடியளவு விபரம்.*

*வடக்கே – ரோடு*
*கிழக்கே – சரோஜா பாக இடம்*
*தெற்கே – ரீசர்வே நிர்கள் 20/4, 20/7 ல் கட்டுப்பட்ட இடம்*
*மேற்கே – என் கைவசமுள்ள இடம்*
*இதற்குள்பட்ட 1வது தாக்கு கிழமேல் வடபுறம் 15–1/2அடி, தென்புறம் 15–1/2அடி தென்வடல் மேல்புறம் 28 அடி, கீழ்புறம் 28 அடி இதற்கு பரப்பு 434 சதுரடியும் வடபுறமும் 2வது தாக்கு முக்கோணவடிவமானதற்கு கிழமேல் வடபுறம் சாய்வாக 21 அடி தென்புறம் 15–1/2அடி தென்வடல் மேல்புறம் 0 (பூஜ்யம்) கீழ்புறம் 14 அடி இதற்கு பரப்பு 108–1/2 சதுரடியும் ஆக இரண்டு தாக்குகளும் சேர்ந்து மொத்தம் 542–1/2 சதுரடி விஸ்தீரணமுள்ள மனையிடம் உள்பட சமஸ்தமும் சேர்த்து தங்களுக்கு கிரையம்.''*

**11.4** மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள வீட்டிற்கான வரி கட்டிய வரி ரசீது இணைக்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட விண்ணப்பம் ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயத்துள்ள படிதான் உள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.5** மேல்முறையீட்டாளர், மேற்கண்ட நிலத்தின் உரிமை சம்பந்தமாக அசல் வழக்கு எண். 332/2014 ல் மாவட்ட முன்சீப் கோர்டில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையிலுள்ளளது எனவே, திரு.M. தவமணி பெயரில் மின் இணைப்பு வழங்க ஆட்சேபனை தெரிவித்து இருந்தும், மின் இணைப்பை வழங்கியது தவறு எனவே மின்துண்டிப்பு செய்ய வேண்டும் என்று வாதிட்டுள்ளார். எதிர்மனுதாரர், அந்த வழக்கில் மேற்கண்ட இடத்திற்கு மின் இணைப்பு வழங்க கூடாது என்ற கோரிக்கை எதுவும் இடம் பெறவில்லை என்றும் வழக்கில் மின்சார வாரியம் ஒருதரப்பினராக சேர்க்கப்பட வில்லை என்றும், மேலும், மின்சாரம் வழங்க கூடாது என்று எந்த தடை உத்தரவும் பிறபிக்கப்படவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

**11.6** மேலும், அரசு வழக்கறிஞர் அவர்களிடம் இது சம்பந்தமாக சட்டக் கருத்துரை பெறப்பட்டுள்ளது என்றும் அந்த கருத்துருவில் அரசு வழக்கறிஞர் அவர்கள் திரு தவமணி அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கலாம் என்று தெரிவித்துள்ளர்கள் என்று வாதிட்டுள்ளார்.

**11.7** மேற்கண்ட சொத்து நிலுவையிலுள்ள வழக்கு எண். 332/2014 ல் உள்ளதா என்பதை அறிந்து கொள்ள நாம் வழக்கு எண். 332/2014 ல் உள்ள ஷெட்யூல் (schedule-C) ஐ ஆராய வேண்டும் அந்த ஷெட்யூல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

<u>C-Schdule</u>
*''மதுரை தெற்குபதிவு மாவட்டம், அரசரடி சார்பதிவகம், மதுரை மாவட்டம், மதுரை தெற்கு தாலுகா, ஏர்குடி கிராமம், ரீசர்வே எண்.20/1Aல் செண்டு, 7ம் ரீசர்வே எண்.20/1B செண்டு 14ல் மேல்புறம் செண்டு 7ம் சேர்த்து*

*ஆக மொத்தம் செண்டு 14ல் மேல்புறம் கடைசி செண்டு 3 1/2 ல் கீழ்புறம் பகுதி 542 1/2 சதுரடி மனையிடத்திற்கு நான்குமால் அடியளவு விபரம்.*

*வடக்கே – ரோடு*
*கிழக்கே – சரோஜா பாக இடம்*
*தெற்கே – ரீசர்வே எண். 20/4, 20/7 ல் கட்டுப்பட்ட இடம்*
*மேற்கே – வசந்தா கைவசமுள்ள இடம்*

*இதற்குள்பட்ட 1வது தாக்கு கிழமேல் வடபுறம் 15–1/2அடி, தென்புறம் 15–1/2அடி தென்வடல் மேல்புறம் 28 அடி, கீழ்புறம் 28 அடி இதற்கு பரப்பு 434 சதுரடியும் வடபுறமும் 2வது தாக்கு முக்கோணவடிவமானதற்கு கிழமேல் வடபுறம் சாய்வாக 21 அடி தென்புறம் 15–1/2அடி தென்வடல் மேல்புறம் 0 (பூஜ்யம்) கீழ்புறம் 14 அடி இதற்கு பரப்பு 108–1/2 சதுரடியும் ஆக இரண்டு தாக்குகளும் சேர்ந்து மொத்தம் 542–1/2 சதுரடி விஸ்தீரணமுள்ள மனையிடம் உள்பட சமஸ்தமும் சேர்த்து .''*

**11.8** மேற்கண்ட ஷெட்யூலையும் பத்தி **11.3**ல் குறிப்பிட்டுள்ள விற்பனை பத்திரத்தில் உள்ள ஷெட்யூலையும் கூர்ந்து படித்தால் இரண்டும் ஒரே சொத்துதான் என்று தெரிகிறது. எனவே, சம்பந்தபட்ட சொத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று தெரிகிறது.

**11.9** எதிர்மனுதாரர், அரசு வழக்கறிஞர் அவர்களின் சட்டக் கருத்துரு பெற்றுதான், மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளதால் திரு. R. சம்பத் அரசு வழக்கறிஞர் திருமங்கலம் சார்பு நீதிமன்றம் அவர்களின் **2.6.2015** நாளிட்ட சட்டகருத்துரையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*''1. மதுரை மாவட்டம் சொக்கநாதபுரம், 2/10–B, தேனி மெயின் ரோடு விலாசத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு தாழ்வழுத்த மின் இணைப்பு கோரி முத்துப்பிள்ளை மகன் திரு. எம். தவமணி என்பவர் கடந்த 23.4.15 அன்று விண்ணபித்துள்ளார். அவர் தன்னுடைய விண்ணபத்தோடு மேற்படி கட்டிடமும், காலியிடமும் தனக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் காலியிடம் சம்பந்தப்பட்ட கிரைய ஆவண எண்.1227/2014 தேதி 17.4.14, வீட்டு வரி ரசீது மற்றும் முன் உரிமையாளர் பெயரில் உள்ள நிலஉரிமைப் பட்டா நகலையும் தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட ஆவணங்கள் மனுதாரர் திரு. எம். தவமணி என்பவர் மின்இணைப்பு கேட்டு விண்ணபித்துள்ள கட்டிடத்தை தன் கைவசம் வைத்து அனுபவம் செய்து வருவதை நிரூபிக்கும் ஆவணங்கள் ஆகும். திருமங்கலம் முன்சீப் கோர்ட்டில் நிலுவையில் உள்ள ஓ.எஸ்.எண்.332/2014 வழக்கில் மீனாம்பிகை என்பவர் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எதிராக பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. மேற்கண்ட வழக்கானது தனிப்பட்ட நபர்களுக்கு எதிராக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை மற்றும் ஆலயங்கள் பராமரிப்பு ஆணையத்தையும் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை. மேற்கண்ட வழக்கில் தாவா கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என மீனாம்பிகை என்பவரால் தடையுத்தரவோ அல்லது பரிகாரமோ கேட்கப்படவில்லை.*

*2. அசல் வழக்கு எண். ஓ.எஸ் எண்.332/2014 மின்இணைப்பு வழங்குவது சம்பந்தப்பட்டது இல்லை. மீனாம்பிகை என்பவர் 7.4.2015 தேதியிட்ட ஆட்சேபணை மனுவில் தாவா கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்குவது சம்பந்தமாக நீதிமன்ற தடை ஆணை (*Interim injunction*) பெற்றிருப்பதாக தெரிவிக்கவில்லை. எனவே, மனுதாரர் திரு. எம். தவமணி என்பவர் விண்ணபத்துடன் தாக்கல் செய்துள்ள கிரையப்பத்திர நகல், வீட்டுவரி ரசீது, நில உரிமைபட்டா நகல் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையிலும் தாவா கட்டிடம் திரு. தவமணி என்பவரின் முழு உடமையிலும் அனுபவத்தில் இருப்பதை கவனத்தல்*

*எடுத்துக்கொண்டும் மேற்படி கட்டிடத்திற்கு திரு. எம். தவமணி என்கிற பெயரில் தாழ்வழுத்த மின்இணைப்பு வழங்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*ஒப்பம்/xxx xxx நாள் **2.6.2015***
*அரசு வழக்கறிஞர்*
*திருமங்கல சார்பு நீதிமன்றம்,*

**11.10** மேற்கண்ட கருத்துரையை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது திரு தவமணி அவர்கள் மின் இணைப்பு கேட்கும் இடத்தை தன்வசம் வைத்துள்ளார் என்பதற்கு ஆதாரமாக காலியிடம் சம்பந்தபட்ட கிரய பத்திரம் எண். **1227/2014** மற்றும் **17.4.2014** நாளிட்ட வீட்டு வரி ரசீதை சமர்ப்பித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார். மேலும், வழக்கு எண். ஒ எண். **332/2014** ல் மின் இணைப்பு வழங்குவது சம்பந்தப்பட்டது இல்லை. மீனாம்பிகை என்பவர் **7.5.2015** நாளிட்ட ஆட்சேபனை மனுவில் தாவா கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்குவது சம்பந்தமாக நீதிமன்ற தடை ஆணை (Interim injuction) பெற்றிருப்பதாக தெரிவிக்கவில்லை. எனவே, மனுதாரர் திரு. M.தவமணி என்பவர் விண்ணபத்துடன் தாக்கல் செய்துள்ள கிரைய பத்திர நகல், வீட்டு வரி ரசீது, நில உரிமை பட்டா நகல் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையிலும் தாவா கட்டிடம் திரு. M.தவமணி என்பவரின் முழு உடமையிலும், அனுபவத்திலும் இருப்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டும் மேற்படி கட்டிடத்திற்கு திரு M.தவமணி பெயரில் தாழ்வழுத்த மின் இணைப்பு வழங்கலாம் என்று கருத்துரை வழங்கியுள்ளார் என்று தெரிகிறது.

**11.11** மேல்முறையீட்டாளர் நிலத்தின் உரிமையை பற்றிய வழக்கு நிலுவையிலுள்ளது என்று தெரிவித்து ஆட்சேபனை உள்ளதால், மின் இணைப்பை வழங்காமல் இருந்திருக்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார். இது சம்பந்தமாக W.P. 12083 of 2013 Dr.கலாவல்லி எதிர் தலைவர் மின்சார வாரியம் மற்றும் மூவர் என்ற வழக்கில் **30.4.2013** ல் வழங்கப்பட்ட தீர்வின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" 5. In my considered view, the said stand taken by the learned counsel appearing for the petitioner appears to be well founded. While granting electricity service connection, the electricity department may not be concerned with the suit filed by the fourth respondent claiming title over the said property. Siince, no interim injunction has been granted in favour of the fourth respondent, there cannot be any impediment to grant electricity service connection to the petitioner. If any one has to wait till the disposal of the suit and further appeal thereon, then electricity service connection cannot be granted for very number of years….."*

**11.12** மேற்கண்ட தீர்வில், ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ளது என்பதால், மின்சார வாரியம் ஒரு மின் இணைப்பு வழங்குவதை நிறுத்தி வைக்க வேண்டியது இல்லை. மின் இணைப்பு வழங்க தடை ஆணை இல்லாத நிலையில், மனுதாரருக்கு மின் இணைப்பை வழங்குவதற்கு தடை எதுவும் இல்லை ஒருவழக்கு முடியும் வரைக்கும் மேலும் மேல்முறையீடுகள் வரை ஒருவர் காத்திருக்க வேண்டும் எனில், பல வருடங்களுக்கு மின் இணைப்பு வழங்க முடியாது.

**11.13** மேற்கண்ட உயர்நீதி மன்ற தீர்ப்பின்படி, ஒரு இடத்தின் உரிமைக்காக வழக்குகள் நிலுவையிலிருந்தாலும் மின் இணைப்பு வழங்க நீதிமன்ற தடை உத்தரவு இல்லாத நிலையில் மின் இணைப்பு வழங்கலாம் என்பதாலும் திரு. M. தவமணி அவர்களின் விண்ணப்பம் அத்துடன் இணைக்கப்பட்ட உரிமை சான்றிதழும் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதிகளுக்கு இணங்க உள்ளதால் திரு. M. தவமணி அவர்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்கிறேன்.

**12.** **<u>முடிவுரை:</u>**

**12.1** மேற்கண்ட பத்தி எண்.11–ல் உள்ள தீர்வின்படி மதுரை மின்பகிர்மான வட்டத்தில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் செய்யமுடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.2** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். 40/2016 முடிவுக்கு கொண்டுவரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திருமதி. மீனாம்பிகை,
தண்டபாணி கோவில்,
சொக்க நாதபுரம்,
அச்சம்பத்து, மதுரை – 625 019.

2) தலைவர்
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர், மதுரை – 625 007.

3) செயற்பொறியாளர்,
உசிலம்பட்டி,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
உசிலம்பட்டி – 625 532.

4) உதவி பொறியாளர்,
ஆழ்வார் நகர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மதுரை– 625 019.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.